<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 17/2022 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | பாலு | நாள் | 26.04.2024 |
| தகப்பனார் பெயர் | சின்னதம்பி | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. 1ம் வாதி எனக்கு என்ன உறவு என்றால், என் அத்தை ஆவார். நான் கல்லுடைக்கும் தொழில் செய்கிறேன் என்றால், சரிதான். நான் ஆந்திராவில் கல்குவாரியில் தங்கி வேலை செய்கிறேன் என்றால், சரிதான். நான் வருடத்திற்கு ஒரு முறை சொந்த ஊருக்கு வந்து செல்வேன் என்றால், சரிதான். என் சொந்த ஊரில் எனக்கு சொந்தமாக ஏதேனும் நிலம் உள்ளதா என்றால், எனக்கு இல்லை. என் தாயாருக்கு உள்ளது. நான் தற்போது குடியிருந்து வருவது என் சொந்த வீடு ஆகும்.

2) தற்போது நான் குடியிருந்து வரும் வீட்டின் பட்டா எண் மற்றும் சர்வே எண் என்னவென்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. என் அண்ணன் வீட்டிற்கு மின்சார இணைப்பு வழங்கும் போது பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால், என் அண்ணன் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்றால், சரிதான். அதிலிருந்து பிரதிவாதிகளுடன் எங்களுக்கு மனஸ்தாபம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை இல்லை என்றால், சரிதான்.

3) 1ம் வாதி பெருமாயி தாவா சொத்தை எந்த தேதியில் கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி கிரயம் பெற்ற போது என்ன சம்பவங்கள் நடந்தது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி கிரயம் வாங்கும் பொழுது சொத்தை அளந்து பார்த்து கிரயம் பெற்றார்களா? தாவா சொத்திற்கு வில்லங்கத்தை சரிபார்த்தார்களா? என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

4) வாதிகள் அனைவரும் ஆந்திராவில் கல்லுடைக்கும் தொழில் செய்து வந்தனர் என்றால், சரிதான். பிரதிவாதிகளும் ஆந்திராவில்தான் கல்லுடைக்கும் தொழில் செய்துவந்தனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. வீடு உள்ளதாக நான் சொல்லும் நிலையில் எந்த சர்வே எண்ணில் மேற்படி வீடு உள்ளது என்றால், சர்வே

எண் குறித்து எனக்கு சரியாக தெரியாது. மேற்படி வீடு எந்த வருடத்தில் கட்டப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. வருவாய் துறையில் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதாக நான் சொல்லும் நிலையில் எந்த தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

5) நங்கவள்ளி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் யார் யார் மீது புகார் அளித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் மனு அளித்து நிலத்தை அளந்தார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால், வாதிகள் தாவா சொத்தை அளக்க வந்தபோது பிரதிவாதிகள் தடுத்து தங்களுக்கு 0.1 சென்ட் நிலம் வேண்டும் என கூறி பிரச்சனை செய்த விவரம் எனக்கு தெரியும். எந்த தேதியில் அவ்வாறு பிரச்சனை செய்தார்கள் என்றால், தேதி எனக்கு தெரியாது.

6) என் முதல் பிரமாண பத்திரிக்கையில் எந்த தேதியில் அவ்வாறு பிரச்சனை செய்தார்கள் என சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. இவ்வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளனர் என்றால், அவர்கள் கிரயம் பெற்ற நிலத்தை அளந்து கொடுக்க வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளனர். இவ்வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

7) எனக்கு இவ்வழக்கை பற்றியும், இவ்வழக்கு சொத்தை பற்றியும், இவ்வழக்கு சம்பவம் பற்றியும் எந்த விவரமும் தெரியாமல், பிரதிவாதிகள் மீதுள்ள காழ்புணர்ச்சியால், வாதிகளுக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.